## 2.5 1999–2000 – ஒவ்வொரு சட்டமன்றத் தொகுதிக்கும் இரண்டாவது கட்டமாக ரூ.15.00 இலட்சம் ஒதுக்குதல்

ஊரக வளர்ச்சி (மதி1) துறை

அரசாணை (நிலை) எண்.80 நாள் : 29.04.1999

படிக்க :

1. அரசு ஆணை (நிலை) எண்.98, ஊரக வளர்ச்சி, நாள்.21.05.1998
2. அரசு ஆணை (நிலை) எண்.99, ஊரக வளர்ச்சி,நாள்.21.05.1998
3. அரசு கடித எண்.21804/மதி1/98–1, ஊரக வளர்ச்சி, நாள்.23.06.1998
4. அரசு ஆணை (நிலை) எண்.75, ஊரக வளர்ச்சி, நாள்.15.04.1999

**ஆணை**

சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டம் 1997–98ம் வருடம் ஒவ்வொரு சட்டமன்றத் தொகுதி உறுப்பினர்களின் தொகுதிகளை மேம்படுத்துவதற்கு ஒரு தொகுதிக்கு ரூ.25 இலட்சம் வீதம் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களால் அறிமுகப்படுத்தப்பட்டது. 1998–99ம் ஆண்டிற்கு இத்திட்டத்தின் கீழ் ஒரு சட்டமன்ற உறுப்பினர் தொகுதிக்கான நிதி ரூ.35 இலட்சம் என்று மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களால் உயர்த்தப்பட்டது. 17.03.1999 அன்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் சட்டமன்றப் பேரவைக்கு சமர்ப்பிக்கப்பட்ட 1999–2000 ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கையில் பத்தி 19ல் கீழ்கண்டவாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

> "19 சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் தலா ரூ.35 இலட்சம் வீதம் நடப்பு நிதி ஆண்டில் சாலைகள், பாலங்கள், கல்வி நிலையங்கள், போன்ற 6,389 பணிகள் ரூ.82.25 கோடி செலவில் மேற்கொள்ளப்பட்டுள்ளன, இத்திட்டத்திற்கு, வரும் நிதியாண்டில் ஒவ்வொரு சட்டமன்ற உறுப்பினர் தொகுதிக்கும் ரூ.50 இலட்சம் ஒதுக்கப்படும்.“

2) மேற்கண்ட அறிவிப்பிற்கிணங்க ஒவ்வொரு தொகுதிக்கும் முதற்கட்டமாக, ரூ.35 இலட்சம் (ரூபாய் முப்பத்தைந்து இலட்சம் மட்டும்) வீதம் 235 தொகுதிகளுக்கும் ரூ.82.25/– (ரூபாய் எண்பத்தியிரண்டு கோடியே இருபதைந்து இலட்சம் மட்டும்) பார்வை நான்கில் குறிப்பிடப்பட்டுள்ள அரசாணையில் ஒதுக்கி ஆணை வெளியிடப்பட்டது.

3) ஒவ்வொரு சட்டமன்ற உறுப்பினர் தொகுதிக்கும் இரண்டாவது கட்டமாக மீதியுள்ள நிதியான ரூ.15 இலட்சம் (ரூபாய் பதினைந்து இலட்சம் மட்டும்) வீதம் 235 தொகுதிகளுக்கும் ரூ.35.25 கோடி (ரூபாய் முப்பத்தைந்து கோடியே இருபத்தைந்து இலட்சம் மட்டும்) இணைப்பில் உள்ளவாறு ஒதுக்கி ஆணை வெளியிடப்படுகிறது.

4) முன்பத்தி மூன்றில் ஒப்பளிக்கப்பட்டுள்ள செலவினத்திற்கான நிதி 1999–2000ஆம் நிதியாண்டிற்கு சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டத்திற்காக பின்வருமாறு பெறப்படும்.

சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டத்திற்காக, 1999–2000 ஆம் ஆண்டிற்கு ரூ.35.25 கோடி (ரூபாய் முப்பத்தைந்து கோடியே இருபத்தைந்து இலட்சம் மட்டும்) தேவைவப்படுகிறது. தற்போது தேவைப்படும் செலவினத்தில் ரூ.32.00 கோடி மட்டும் (ரூபாய் முப்பத்தியிரண்டு கோடி மட்டும்) “2515 00 101 JF பரவலாக்கப்பட்ட மாவட்டத்திற்கான உள்ளாட்சி மன்றங்களுக்கு நிதி உதவி“ என்ற உள் தலைப்பிலிருந்து “2515.00 ஏனைய ஊரக வளர்ச்சித் திட்டங்கள் –800–ஏனைய செலவு–ஒன்பதாம் ஐந்தாண்டுத் திட்டப் பணிகள் II – மாநிலத் திட்டம் JV – சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் ஏனைய திட்டங்களை செயல்படுத்துதல் என்ற உள்தலைப்பிற்கு மறுநிதி ஒதுக்கம் மூலம் திருத்திய மதிப்பீடு மற்றும் இறுதி திருத்திய மதிப்பீட்டில் 1999–2000 ஆம் ஆண்டில் நிதியொதுக்கம் செய்யப்படும். மீதி தேவைப்படும் அதிகப்படியான ரூ.3.25 கோடி (ரூபாய் மூன்று கோடியே இருபத்தைந்து இலட்சம் மட்டும்) க்கான செலவினம் “புது துணைப்பணி“ குறித்ததாகும். சட்டமன்றத்தில் ஒப்புதல் கிடைக்கும்வரை எதிர்பாரா செலவு நிதியிலிருந்து முன்பணம் பெறுவதன் மூலம் இச்செலவு செய்யப்படும். 1999–2000ஆம் ஆண்டில் செலவிட கருதியுள்ள தொகைக்கு எதிர்பாரா செலவு நிதியிலிருந்து முன்பணம் பெற ஊரக வளர்ச்சி இயக்குநர் உரிய படிவத்தில் விண்ணப்பிக்க வேண்டும். இத்துடன் ஒரு விளக்கக் குறிப்பு, இத்திட்டத்திற்காக ஆகும் மொத்த செலவு, நடைமுறைப்படுத்தப்படும் ஆண்டில் ஆகும் செலவுத் தொகை, எதிர்பாரா நிதியிலிருந்து பெறப்படும் முன்பணத் தொகை மற்றும் இத்திட்டத்திற்கான சிறு விபரக் குறிப்பினையும் சேர்த்து சட்டமன்றப் பேரவையில் ஒப்புதலைப்

பெறும் பொருட்டு 1999–2000 ஆம் ஆண்டிற்கான துணைமானியக் கோரிக்கையில் சேர்ப்பதற்காக நிதி (வரவு–செலவு பொது–I) துறைக்கு அனுப்பி வைக்கும்படி ஊரக வளர்ச்சி இயக்குநர் கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

5. பார்வை நான்கில் குறிப்பிடப்பட்டுள்ள அரசாணையில் வெளியிடப்பட்டுள்ள வழிகாட்டி நெறிமுறைகள் முன்பத்தி மூன்றில் ஒப்பளிக்கப்பட்டுள்ள செலவினத்திற்கும், பொருந்தும்.

6. முன்பத்தி மூன்றில் ஒப்பளிக்கப்பட்டுள்ள செலவினம் கீழ்கண்ட கணக்குத் தலைப்பின்கீழ் பற்று வைக்கப்பட வேண்டும்.

> "2515–00– ஏனைய ஊரக வளர்ச்சித் திட்டங்கள்–800 ஏனைய செலவு – ஒன்பதாம் ஐந்தாண்டுத் திட்டப் பணிகள்–II–மாநில திட்டம் – JV –சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் ஏனைய திட்டங்களை செயல்படுத்துதல்–09–உதவி மானியங்கள் (து.தொ.கு.2515 00 800 JV 0909)"

7. இந்த ஆணை நிதித்துறையின் அ.சா.எண்.324/JS(SKS)/99 நாள்.29.04.1999 ன் ஒப்புதலுடன் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

**இரமேஷ் சந்திர பண்டா**
அரசு செயலாளர்

## 2. MLACDS

**இணைப்பு**

ஊரக வளர்ச்சித்துறையின் அரசாணை (நிலை) எண்.80 நாள்.29.04.1999 சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டம் மாவட்ட வாரியான இரண்டாவது கட்ட நிதி ஒதுக்கீடு

| வ.எண். | மாவட்டத்தின் பெயர் | மொத்த சட்டமன்றத் தொகுதிகள் | மாவட்டத்திற்காக ஒதுக்கப்படும் மொத்த நிதி ஒவ்வொரு தொகுதிக்கும் ரூ.15 இலட்சம் என்ற அடிப்படையில் (ரூ.இலட்சத்தில்) |
|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 |
| 1. | சென்னை (நியமிக்கப்பட்ட ஒரு சட்டமன்ற உறுப்பினரையும் சேர்த்து) | 15 (14+1) | 225 |
| 2. | காஞ்சிபுரம் | 9 | 135 |
| 3. | திருவள்ளூர் | 8 | 120 |
| 4. | கடலூர் | 9 | 135 |
| 5. | விழுப்புரம் | 12 | 180 |
| 6. | வேலூர் | 12 | 180 |
| 7. | திருவண்ணாமலை | 9 | 135 |
| 8. | சேலம் | 12 | 180 |
| 9. | நாமக்கல் | 5 | 75 |
| 10. | தர்மபுரி | 10 | 150 |
| 11. | ஈரோடு | 11 | 165 |
| 12. | கோயம்புத்தூர் | 14 | 210 |
| 13. | நீலகிரி | 3 | 45 |
| 14. | தஞ்சாவூர் | 9 | 135 |
| 15. | நாகப்பட்டினம் | 6 | 90 |
| 16. | திருவாரூர் | 5 | 75 |
| 17. | திருச்சிராப்பள்ளி | 9 | 135 |
| 18. | கரூர் | 4 | 60 |
| 19. | பெரம்பலூர் | 5 | 75 |
| 20. | புதுக்கோட்டை | 5 | 75 |
| 21. | மதுரை | 10 | 150 |
| 22. | தேனி | 5 | 75 |
| 23. | திண்டுக்கல் | 7 | 105 |
| 24. | இராமநாதபுரம் | 5 | 75 |
| 25. | விருதுநகர் | 6 | 90 |
| 26. | சிவகங்கை | 5 | 75 |
| 27. | தூத்துக்குடி | 7 | 105 |
| 28. | திருநெல்வேலி | 11 | 165 |
| 29. | கன்னியாகுமரி | 7 | 105 |
| | மொத்தம் | 235 | 3525 |

(மொத்தம் ரூபாய் முப்பத்தைந்து கோடியே இருபத்தைந்து இலட்சம் மட்டும்)